# 1 ரூபாய் கட்டணத்தில் மின்சார ஸ்கூட்டர் வசதி

சென்னை, டிச. 9–

ஆலந்துார் மெட்ரோ நிலையத்தில், நிமிடத்திற்கு, 1 ரூபாய் கட்டணத்தில், பயணியருக்கு மின்சார ஸ்கூட்டர் வாடகைக்கு விடப்படுகிறது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் பயணியர், நிலையத்தில் இருந்து, செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவாக செல்வதற்கு ஏதுவாக, ஆலந்துார் மெட்ரோ நிலையத்தில், நிமிடத்திற்கு, 1 ரூபாய் கட்டணத்தில், மின்சார ஸ்கூட்டர் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனத்துடன் இணைந்து, மெட்ரோ நிர்வாகம், இவ்வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மின்சார ஸ்கூட்டர்களை, காலை, 7:00 மணி முதல், இரவு, 9:00 மணி வரை, பயணியர் பயன்படுத்தலாம்.

மணிக்கு, 60 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும். கட்டணத்தை, கூகுள் பிளே ஸ்டோரில், 'பிளை ரென்டல்ஸ்' என்ற மொபைல் போன் செயலி வாயிலாகவும் செலுத்தலாம்.

இந்த ஸ்கூட்டரை, பயணியர் ஆலந்துாரில் எடுத்தாலும், அருகில் உள்ள, எந்த மெட்ரோ நிலையத்திலும் வேண்டுமானாலும் ஒப்படைக்கலாம்.

தற்போது, ஆறு ஸ்கூட்டர்கள் பயணிருக்காக வைக்கப்பட்டுள்ளன. பயணியரின் வரவேற்பையொட்டி, ஸ்கூட்டர் எண்ணிக்கையை, 15 ஆக உயர்த்த திட்டம் உள்ளது.